629

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 167/2021

Deposition of Witness for P.W.12

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.வெங்கடேசன் |
| FATHER'S NAME | - | திரு.குப்பன் |
| ADDRESS | - | அணைக்கட்டு |
| OCCUPATION | - | கிராம நிர்வாக அலுவலர் |
| AGE | - | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.09.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை–**

1. நான் தற்போது வண்ணாந்தாங்கல் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 18.06.2021ம் தேதி குருவராஜபாளையத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது அன்று என்னுடன் சின்னபள்ளிக்குப்பம் கிராம நிர்வாக அலுவலர் அபிலாசும், குருவராஜபாளைய கிராம நிர்வாக அலுவலகம் சென்று கொண்டிருந்த போது வேப்பங்குப்பம் காவல் நிலைய ஆய்வாளர் வசந்த் என்பவரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார். அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க இருப்பதால் அதற்கு எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்கக் கேட்டுக்கொண்டதால் நாங்கள் சாட்சியாக இருந்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். இரண்டாவது கையெழுத்து அபிலாஷ்

19/09/25

629

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 167/2021

Deposition of Witness for P.W.12

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.வெங்கடேசன் |
| FATHER'S NAME | - | திரு.குப்பன் |
| ADDRESS | - | அணைக்கட்டு |
| OCCUPATION | - | கிராம நிர்வாக அலுவலர் |
| AGE | - | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.09.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை–**

1. நான் தற்போது வண்ணாந்தாங்கல் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 18.06.2021ம் தேதி குருவராஜபாளையத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது அன்று என்னுடன் சின்னபள்ளிக்குப்பம் கிராம நிர்வாக அலுவலர் அபிலாசும், குருவராஜபாளைய கிராம நிர்வாக அலுவலகம் சென்று கொண்டிருந்த போது வேப்பங்குப்பம் காவல் நிலைய ஆய்வாளர் வசந்த் என்பவரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார். அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க இருப்பதால் அதற்கு எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்கக் கேட்டுக்கொண்டதால் நாங்கள் சாட்சியாக இருந்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். இரண்டாவது கையெழுத்து அபிலாஷ்

19/9/25

என்பவருடையது. அந்த முதல் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.8** ஆகும்

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

கிராம நிர்வாக அலுவலருக்கு Vigilance Manual உள்ளது. அதன் அடிப்படையில் தான் நான் செயல்பட வேண்டும் என்றால் சரி. நாங்கள் வேறு அலுவலக வேலைக்கு செல்வதாக இருந்தால் உயர் அதிகாரிக்கு தகவல் சொல்லிவிட்டு செல்வேன். நான் என்ன வேலையாக குருவராஜபாளையம் பஸ் ஸ்டாப் சென்றேன் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை. வழக்கில் நான் சாட்சியாக இருப்பது குறித்து உயர்அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். இந்த வழக்கில் சாட்சியாக இருப்பது குறித்து தாசில்தாரிடம் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. காவலருக்கு சார்பாக பல வழக்குகளில் சாட்சியம் சொல்லி இருக்கிறேன் என்றால் நடந்த விவரத்தை சொல்லியிருக்கிறேன். எதிரி வசந்தை எந்த நேரத்தில் கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் 04.15 மணிக்கு விசாரித்தார்கள். நான் அலுவலக வேலையாக சென்றால் அலுவலக முத்திரை எடுத்து செல்ல வேண்டும். ஒப்புதல் வாக்குமூலத்தில் அலுவலக முத்திரை எதுவும் இடவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை கேள்வி கேட்டு கேள்வி பதில் வடிவத்தில் எழுதிகொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கேள்வி, பதில் வடிவத்தில் இல்லை என்றால் சரி. சாட்சியாக இருக்க சொல்லி போலீசார் எனக்கு சம்மன் எதுவும் கொடுக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக சொல்லப்படும் சமயத்தில் தனிநபருக்கு போலீசார் சாட்சியாக இருக்க சொல்லி சம்மன் அளிக்கவில்லை. எதிரி என்

19/07/2025

631

முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போலீசார் தயார் செய்த ஆவணங்களில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

ஆஜர் எதிரிகளில் வசந்தகுமார் யார் என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

உண்மையில் வசந்தகுமார் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருந்தால் நான் நீதிமன்றத்தில் சரியாக அடையாளம் காண்பித்திருப்பேன் என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் கையெழுத்து செய்ததால் எதிரியை அடையாளம் காட்ட முடியவில்லை என்றால் சரியல்ல.

19/09/2025

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 19.09.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

19.9.25

Additional District Judge(FTC),
Vellore